

கோவை காந்திபுரத்தில் ரூபாய் 300 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலக கட்டுமானப் பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகவளாகத்தில் இளையோர் நலன் மற்றும் அதிகாரப்படுத்துதல் மையத்தின் சார்பில் துணைவேந்தர் முனைவர் க.ரவி தலைமையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு 2000மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், சிவ.வீ.மெய்யநாதன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், எம்.பி.க்கள் கார்த்தி ப.சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி கா பொற்கொடி, சிவகங்கை மறை, மாவட்ட ஆயர் லூர்து ஆனந்த் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட தலைவர்கள் சிலைகளை முதல்வர் திறந்து வைக்கிறார்!

# பொள்ளாச்சியில் நடைபெறும் விழாவில் விவசாயப் பெருங்குடி மக்கள் திரளாகப் பங்கேற்பீர்!

## பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அழைப்பு!

சென்னை, ஜூலை 21-

முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 23ஆம் தேதி பொள்ளாச்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திருஉருவச் சிலை மற்றும் அரங்கத்தினை திறந்து வைக்க உள்ளார்கள். நிகழ்ச்சியில் விவசாயப் பெருங்குடி மக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் பொதுப்பணித்துறை நீர்வள தலைமை பொறியாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டு வரும் பெருந்தலைவர் கு.காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், வி.கே.பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திரு உருவச்சிலை / மற்றும் அரங்கம் அமைக்கும் இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று முன்தினம் (19.07.2025) பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் தமிழ்நாடு அரசின் முதன்மை செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், தலைமை பொறியாளர் ரங்கநாதன், பொள்ளாச்சி நகர் மன்ற தலைவர் திருமதி.ஷியாமளா நவநீதகிருஷ்ணன், செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பொதுப் பணித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முழுவதும் ஆற்றல் மிகுந்த தலைவர்களை போற்றும் வகையில் அவர்களுக்காக அரங்கம் கட்டுவது சிலை அமைப்பது போன்ற பணிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்று வருகிறது.

அதன் அடிப்படையில் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் நடைபெற காரணமாக திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், இப்பகுதி விவசாயிகளின் தந்தை என அழைக்கப்படும் வி.கே.பழனிசாமி கவுண்டர், மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோருக்கு திருவுருவச் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் ரூபாய் 4 கோடி 25 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்ற இப்பணிகள் ஆனது இப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் சக்தியாக திகழ்ந்த இந்த நான்கு பெருந்தலைவர்களை நினைவுகூரும் வகையில், சிலை அமைப்பதுடன், விவசாய மக்கள் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக 1348 சதுர அடியில் அரங்கம் அமைக்கும் பணியும் இந்த அளவில் முழுமை அடைந்துள்ளது.


முழுமையடைந்த இப்பணிகளை, வருகின்ற 23ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்பகுதிக்கு வருகை தந்து இப்பெரியவர்களின் திருவுருவச் சிலையினையும் அரங்கத்தினையும் திறந்து வைக்க உள்ளார்கள். நிகழ்ச்சி முழுக்க முழுக்க விவசாய மக்கள் சார்ந்த விவசாயிகளுக்கான நிகழ்ச்சியாக இருப்பதால் இப்பகுதியின் விவசாய மக்கள் இந்நிகழ்ச்சியில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அரசின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

### கூட்டணி ஆட்சி என்று கூறும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமிக்கு

# தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?

## அமைச்சர் கே.என்.நேரு காட்டமான அறிக்கை!



சென்னை, ஜூலை 21 -

பழனிசாமி விரித்திருப்பது ரத்தினக் கம்பளம் அல்ல. பா.ஜ.க.வின் பாசிச ரத்தக் கம்பளம் என்பதை தி.மு.க.வின் தோழமைக் கட்சிகளும் மக்களும் அறிவார்கள். கோவையில் பேசியவரும் சிதம்பரத்தில் பேசியவரும் ஒரே ஆளா?' என்று வாக்காளர் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டணி ஆட்சி என்று மூச்சுக்கு முப்பது தடவை சொல்லிக் கொண்டிருக்கும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா? என நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் பயணம் போய்க் கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தினம் தினம் கேலிக் கூத்துகளை அரங்கேற்றி நெட்டிசன்களுக்கு ட்ரோல் மெட்டிரியல் ஆகிக் கொண்டிருக்கிறார்.

**பழனிசாமியின் மகனைக் காப்போம்! சம்பந்தியை மீட்போம்!**

'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பைத் தயவு செய்து மாற்றிவிடுங்கள் பழனிசாமி அவர்களே! 'சம்பந்தியை மீட்டோம்; சம்பாதித்த பணத்தைக் காப்போம்!', 'மக்களை மறப்போம்; தமிழ்நாட்டை விற்போம்!', 'மகனைக் காப்போம்; சம்பந்தியை மீட்போம்' எனத் தலைப்பை மாற்றிக் கொண்டு பழனிசாமி பா.ஜ.க. அடிமை பயணத்தைத் தொடங்கலாம்.

பா.ஜ.க. கூட்டணியை விட்டு விலகுவது போல 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு நாடகத்தை அரங்கேற்றி, கூட்டணிக் கட்சிகளை அ.தி.மு.க.வில் சேர்க்க முயன்றார் பழனிசாமி. ஆனால், அது கைகூடவில்லை. அதன் பிறகு தொடர்ச்சியாக தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை அழைத்துக் கொண்டே இருந்தார். ஒரு கட்சிகூட அ.தி.மு.க. அணியில் சேரவில்லை.

"2026 தேர்தலில் பலமான கூட்டணியை அமைப்பேன்; வெற்றிக் கூட்டணி அமையப் போகிறது; தொண்டர்கள் எதிர்பார்க்கும் கூட்டணி அமையும்; பா.ஜ.க. அல்லாத கட்சிகளுடன் கூட்டணி' என்றெல்லாம் தொடர்ந்து பழனிசாமி உருட்டிக் கொண்டே இருந்தார். 'நீ உருட்டுப்பா... உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லதா நடக்கும்' என பழனிசாமியை உசுப்பேத்தி உசுப்பேத்தி உடம்பை ரணகளம் ஆக்கியதுதான் மிச்சம். கூட்டணியை உருவாக்கக் கூடிய பழனிசாமியின் ஆளுமைதான் சரிந்து தொங்கியது!

ஆனால், அ.தி.மு.க.வின் கூட்டணி கணக்கை டெல்லியில் இருக்கும் பழனிசாமியின் முதலாளிகள் போட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியில் கடந்த ஏப்ரல் மாதம் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா சென்னை வந்து, கூட்டணியை அறிவித்து விட்டுப் போனார்.

ஆனால், கூட்டணிக்குத் தலைமை தாங்குவதாகத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி நாட்டாமை படத்தில் கவுண்டமணிக்கு பெண் பார்க்கும் காட்சியில் ஒருவர் மிக்ஸர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் போல அமித்ஷா பக்கத்தில் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

**கூட்டணிக்கு ஆள் சேர்க்கும் பழனிசாமி!**

அ.தி.மு.க. கூட்டணி அமைந்தாலும் அதனை 'திமுக கூட்டணி' என்று அ.தி.மு.க.வினரைத் தவிர மற்றவர்கள் யாருமே சொல்வதில்லை. அ.தி.மு.க., பா.ஜ.க., த.மா.கா. தவிர அந்தக் கூட்டணியில் வேறு யாருமே இல்லாததால், 'மக்களை மறப்போம்; தமிழ்நாட்டை விற்போம்!' பயணத்தில் கூட்டணிக்கு மீண்டும் ஆள் பிடிக்க இறங்கிவிட்டார் பழனிசாமி. 'பிரமாதமான கட்சி எங்கள் கூட்டணிக்கு வரப் போகிறது' என்று ஆருடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். ரத்னக் கம்பளத்தைத் தூக்கிக் கொண்டு திரிகிறார்.

கோவை பயணத்தில், "கம்யூனிஸ்ட் கட்சி கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டே செல்கிறது. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதா? இல்லையா? என்று முகவரி இல்லாமல் இருக்கிறது" என்று பேசியவர், சிதம்பரம் பயணத்தில், கூட்டணியில் சேர வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கிறார். 'எங்கள் கூட்டணியில் சேர்ந்தால் ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்போம்' என்கிறார். 'கோவையில் பேசியவரும் சிதம்பரத்தில் பேசியவரும் ஒரே ஆளா?' என்று வாக்காளர் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**ரத்தினக் கம்பளம் அல்ல ரத்தக் கம்பளம்!**

பழனிசாமி விரித்திருப்பது ரத்தினக் கம்பளம் அல்ல. பா.ஜ.க.வின் பாசிச ரத்தக் கம்பளம் என்பதை தி.மு.க.வின் தோழமை கட்சிகளும் மக்களும் அறிவார்கள்.

அதனால்தான் பழனிசாமியின் அழைப்பைக் கம்யூனிஸ்ட்டுகளும் விடுதலைச் சிறுத்தைகளும் நிராகரித்திருக்கின்றன.

பா.ஜ.க.வோடு அ.தி.மு.க. கூட்டணி வைப்பதற்குச் சில நாட்கள் முன்பு கூட, 'தி.மு.க. கூட்டணியில் இருக்கிற கட்சிகள் எந்தக் காலத்திலும் வளராது' என விரக்தியாக பழனிசாமி சாபம் இட்டார். அப்படிப் பேசிய நாக்குதான், பிறகு கூட்டணிக்காகக் கெஞ்சின.

2004 நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகளை 'தத்துவப் பச்சோந்திகள்' என மிகக் கீழ்த்தரமாக விமர்சித்தார் ஜெயலலிதா. அவருடைய வழியில் பழனிசாமி, 'கம்யூனிஸ்ட் கட்சியினர் தி.மு.க.விடம் பணம் வாங்கியபோதே அவர்களது கதை முடிந்துவிட்டது" என மோசமாகப் பேசுகிறார்.

**பழனிசாமி பா.ஜ.க.வை விமர்சித்ததுண்டா!**

இப்படி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை விமர்சிக்கும் பழனிசாமி, என்றைக்காவது பா.ஜ.க.வை விமர்சித்திருக்கிறாரா? கூட்டணி ஆட்சி என்று மூச்சுக்கு முப்பது தடவை சொல்லிக் கொண்டிருக்கும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?

"அமித்ஷா வீட்டின் கதவைத் தட்டினால்தான் தமிழ்நாட்டு மக்களின் பிரச்னை தீரும். அதனால் நாங்கள் அவர் வீட்டின் கதவைத் தட்டினோம்" என்று வெட்கமே இல்லாமல் சொல்கிறார் பழனிசாமி. அமித்ஷா வீட்டிற்குப் போவதாக இருந்தால் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே! எதற்காக மக்கள் பிரச்சினையை பேச கார்களில் மாறி மாறிப் போக வேண்டும்? 'டெல்லி அதிமுக அலுவலகத்தைப் பார்க்க வந்தேன்' என ஏன் பொய் சொல்ல வேண்டும்?.

தோல்வி மேல் தோல்வியடைந்து வரும் பழனிசாமி 2026 சட்டமன்றத் தேர்தலிலும் படுதோல்வி அடைவார் என்பது உறுதியானதால்தான் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி கூட்டணிக் கட்சிகளுக்கு ஆள் பிடிக்க பஸ்சில் பயணிக்கிறார்.

2021 தேர்தலில் பழனிசாமியின் பச்சைப் பொய்களை நம்பாமல், புறந் தள்ளிய மக்கள், 2024 நாடாளுமன்றத் தேர்தலைப் போல 2026 தேர்தலிலும் பித்தலாட்ட பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியைப் புறக்கணித்து நம்பிக்கை நாயகனான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் அரியணையில் ஏற்றுவார்கள். மக்களின் பேராதரவோடு திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடரும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தமிழ்நாட்டில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்த – முதல்வரால்

# 2,436 நபர்களுக்கு புதிய ஆசிரியர் பணிக்கான ஆணை விரைவில் வழங்கப்படும்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கள்ளக்குறிச்சி, ஜூலை 21 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலம் தனியார் பள்ளிக் கலையரங்கில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த், முன்னிலையில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2025) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தலைமை தாங்கி கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், தேர்ச்சி விகிதக் குறைவு, தேர்ச்சிக் குறைவிற்கான காரணங்கள், பாடவாரியாக மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தேர்ச்சி விகிதம், பள்ளிகளின் செயல்பாடு, மாணவர்களின் கற்றல் திறன், கற்றல் திறனை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் விரிவாகக் கேட்டறிந்து ஆய்வு செய்தார், மேலும் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் கருத்துகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தனித்தனியாகக் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இதன் பின்னர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாடு, நவீன மயமாக்கம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி பள்ளிக் கல்வித்துறை முன் மாதிரித் துறையாக விளங்கி வருகிறது.

அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு 2025 குறித்த ஆய்வுக் கூட்டம், கள்ளக்குறிச்சியில் இன்றைய தினம் இக்கூட்டத்தில் மாணவர்களின் கற்றல் திறன், தேர்ச்சி விகிதம், தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், தலைமை ஆசிரியர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பின் தங்கிய பள்ளிகளைக் கண்டறிந்து அதன் நிலையை மாற்றவும் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பது குறித்தும் விரிவாக கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது,மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை, புதிய பள்ளிக் கட்டிடங்கள் விபரம் மற்றும் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஏற்கனவே சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இதேபோன்று இன்றைய ஆய்வுக் கூட்டத்திலும் மாணவர்களின் இடைநிற்றலுக்கான காரணம், தேர்ச்சி விகிதம், பள்ளிக்கு மாணவர்களின் சேர்க்கை விகிதம், பள்ளிக்கு வருகை தராத மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பள்ளிக்கு வருகை தர மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கபட்டது.

பள்ளிகளில் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் கற்கும் திறனை ஆசிரியர்கள் கவனிக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களை நன்றாக கவனித்து அவர்களின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள வேண்டும், ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை மாணவர்களுக்கு நன்றாக புரிந்துள்ளதா, நன்றாக கவனிக்கிறார்களா என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாநில அளவிலான கற்றல் திறன் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் அடிப்படையில் மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும்.

ஆசிரியர்கள் நடத்தப்படும் பாடங்களிலிருந்து மாணவர்களிடம் எளிய முறையில் கேள்விகளை கேட்க வேண்டும். மாணவர்களின் கல்வி கற்றலை உயர்த்தும் வகையில் ஆசிரியர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள். உயர்கல்வி மாணவர்களுக்கு உரிய முறையில் பாடம் கற்பித்து வருகிறார்கள், முதலமைச்சர் அவர்களால் கொரோனா காலத்தில் மாணவர்கள் கல்விக் கற்கும் வகையில் இல்லம் தேடிக் கல்வி திட்டம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எண்ணும் எழுத்தும் திட்டம் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல்வேறு திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி வளர்ச்சிக்கென பல்வேறு தொழில்நுட்பமும் செயல்பட்டு வருகிறது.

அதிகப்படியான தொழில்நுட்பம் வந்தாலும் ஆசிரியர்களுக்கு இணையாக கற்றுத் தர முடியாது. தலைமை ஆசிரியர்கள் அடிக்கடி பள்ளியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் கல்வித் தொடர்பாக கேள்விகள் கேட்கப்பட வேண்டும். மாணவர்களின் திறன் அறிந்து ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அளவிலான அடைவுத் தேர்வு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசு பள்ளி மாணவர்களுக்கு உயர்நிலை, மேல்நிலைக் கல்வியைப் போன்று அடிப்படை கல்வியையும் மேம்படுத்த தமிழக அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2,436 நபர்களுக்கு புதிய ஆசிரியர் பணிக்கான ஆணை விரைவில் வழங்கப்பட உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் எஸ்.எல்.ஏ.எஸ். அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதனை ஆசிரியர்கள் தகுந்த முறையில் மாணவர்களுக்கு கற்பித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் ஆசிரியர் களிடமிருந்து கல்விப் பாடத்தை மட்டுமல்லாமல் வாழ்க்கை பாடத்தையும் கற்றுக் கொள்கிறார்கள்.

எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் கற்றல் திறனை அதிகரிப்பதற்கான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகளை அனைத்து நிலை கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா.கார்த்திகா, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மா.ரேணுகோபால், தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் 18.07.2025 அன்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களை மொரிஷியஸ் நாட்டின் இளைஞர் (ம) விளையாட்டுத் துறை அமைச்சர் தர்மராஜன் நாகலிங்கம் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



மேல்புறம் தெற்கு ஒன்றியம்,
கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



அவனியாபுரம் மேற்குப் பகுதி,
மதுரை தெற்கு மாவட்டம்.



வேடசந்தூர் தெற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.



குடவாசல் பேரூர்,
திருவாரூர் மாவட்டம்.



நங்கவள்ளி மத்திய ஒன்றியம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



பாண்டமங்கலம் பேரூர்,
நாமக்கல் மேற்கு மாவட்டம்.



அரிமளம் வடக்கு ஒன்றியம்,
புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.



ஒரத்தநாடு வடக்கு ஒன்றியம்,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்,
தஞ்சாவூர் வடக்கு மாவட்டம்.



கோட்டூர் பேரூர்,
கோவை தெற்கு மாவட்டம்.



காரமடை கிழக்கு ஒன்றியம்,
கோவை வடக்கு மாவட்டம்.



விளாப்பாக்கம் பேரூர்,
ராணிப்பேட்டை மாவட்டம்.



மாமல்லபுரம் நகரம்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



கெங்குவார்பட்டி பேரூர்,
தேனி வடக்கு மாவட்டம்.



இராமநாதபுரம் தெற்கு நகரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.



புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்,
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.



உளுந்தூர்பேட்டை நகரம்,
கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.



கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம்,
கடலூர் மேற்கு மாவட்டம்.